**C.C No. 119/2021**

**Dated: 10.08.2023**

**PW: 1**

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

| | |
|---|---|
| Name | : செல்வமணிகண்டன் |
| Father 's Name: | : கோமு |
| Address | : 245/6 ராஜீவ் நகர், 3 வது தெரு, பாண்டவர்மங்கலம் |
| Age | : 37 |

**<u>2-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

நான் வசித்து வரும் பாண்டவர் மங்கலம் சிறிய கிராமம் என்றால் சரிதான். அந்த பகுதியானது கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பஞ்சாயத்து ஆகும். பாண்டவர்மங்கலம் கோவில்பட்டி நகராட்சியின் விரிவாக்கத்திற்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். நான் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் பேங்க் ஆப் இந்தியா, கோவில்பட்டி கிளையில் வங்கி கணக்குகள் பராமரித்து வருகிறேன். 2014 ம் ஆண்டிலிருந்து என்னுடைய தொழில் என்னவென்றால் ரியல் எஸ்டேட், வீடு வாங்கி விற்பனை செய்யும் தரகராகவும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு தரகராக தொழில் செய்வதன் மூலமாக எனக்கு வரும் வருமானத்தினை நான் வங்கியில் செலுத்துவேனா என்றால் அதிகமான தொகை கிடைக்கும்பட்சத்தில் அதனை என்னுடைய மேற்கூறிய இரு வங்கி கணக்குகளிலும் செலுத்துவேன். சிறிதளவு தொகையினை எப்போதும் கையிருப்பு தொகையாக வைத்துக்கொள்வேன். சிறியளவு தொகை கையிருப்பு தொகையாக வைத்துக்கொள்வேன் என்று கூறியுள்ளது சுமார் ரூ.1 இலட்சம் வரை எனக்கு வருமானம் கிடைத்தால் அதில் பாதி தொகையை எனது கையிருப்பு தொகையாக வைத்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வங்கியில் செலுத்திவிடுவேன். ரூ.5,00,000/- அல்லது ரூ.10,00,000- எனக்கு

வருமானமாக கிடைத்தால் அதில் ரூ.50,000/-ஐ மட்டும் கையிருப்பு தொகையாக வைத்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வங்கியில் செலுத்திவிடுவேனா என்றால் ரூ.5 இலட்சம் அல்லது ரூ.10 இலட்சம் எனக்கு வருமானமாக கிடைத்தது.

மாதாந்திர வருமானமாக எனக்கு எவ்வளவு தொகை கிடைக்கும் என்றால் அறுதியிட்டு தொகையினை கூற இயலாது. எனக்கு சில மாதங்கள் வருமானம் கிடைக்காமலும் இருக்கலாம். என்னிடம் உள்ள சேமிப்பு தொகையினை வைத்துக்கொண்டு அதை மாத சீட்டிற்கு செலுத்துவது உண்டு என்றால் சரிதான். அவ்வாறு எந்த நிறுவனத்திடம் மாதாந்திரமாக சீட்டு தொகை எடுத்து கட்டி வருகிறேன் என்றால் கோவில்பட்டியில் உள்ள கே.ஆர் சீட்டு கம்பெனி மற்றும் மற்றொரு நிறுவனத்தின் புதுரோட்டில் அமைந்துள்ள அந்நிறுவனத்தில் சீட்டு கட்டி வருகிறேன். அந்த நிறுவனத்தின் பெயர் எனக்கு நினைவில்லை. எந்த கால கட்டத்தில் நான் சீட்டு கட்டி வந்தேன் என்றால் 2018-2019 கால கட்டத்தில் மேற்கூறிய நிறுவனத்தில் நான் சீட்டு கட்டி வந்தேன். கே.ஆர் சீட்டு கம்பெனியில் தற்போது வரை சீட்டுகட்டி வருகிறேன். திருநெல்வேலியில் அமைந்துள்ள மற்றொரு சீட்டு கம்பெனியில் சீட்டு கட்டி வந்தேன் அந்த நிறுவனத்தின் பெயர் எனக்கு நினைவில்லை. தற்போது அந்த கம்பெனியில் நான் சீட்டு கட்டி வரவில்லை. அதிகபட்சமாக மொத்தமாக ரூ.2 லட்சத்திற்கான மாதாந்திரம் சிறிதளவு தொகைகளாக செலுத்தி வருகிறேன். ரூ.1 லட்சத்திற்கான சீட்டு என்றாலும் வேறு தொகைக்கான சீட்டு என்றாலும், அனைத்து சீட்டும் 20 மாதத்திற்கானது ஆகும். எனக்கு கோவில்பட்டியில் சொந்தமாக 2 வீடுகள் உள்ளது. 2 வீட்டில் 1 வீட்டினை ஒத்திக்கு கொடுத்துள்ளேன், மற்றொரு வீட்டில் நான் வசித்து வருகிறேன். என்னுடைய மனைவி வீட்டு

குடித்தனமாக உள்ளார். எதிரிகள் 2 முதல் 4 வரையிலானவர்கள் எனக்கு 2010ம் ஆண்டிலிருந்து எனக்கு பழக்கம் என்றால் சரிதான். எதிரிகள் 2 முதல் 4 வரையிலானவர்களின் பெயர்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். அவர்கள் என்னுடைய உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். அவர்கள் யாரும் என்னுடன் படித்தவர்கள் இல்லை என்றாலும் சரிதான்.

எதிரிகள் 2 முதல் 4 வரையிலானவர்களை எனக்கு தரகர் தொழில் மூலமாக பழக்கம் ஏற்பட்டதா என்றால் 3 வது எதிரியை மட்டும் தான் பரிட்சயம் மற்ற எதிரிகளை எனக்கு 3வது எதிரியின் மூலமாக தெரியவந்தது. 3வது எதிரி அவருக்கு சொந்தமான மானூரில் அமைந்துள்ள இடத்தினை விற்பனை செய்ய வேண்டுமென்று அங்குள்ள சக தரகரினை அணுகி அவர்கள் கூறி எனக்கு அதன் வாயிலாக 3வது எதிரியுடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. 3வது எதிரியுடன் 2012ம் ஆண்டிலிருந்து எனக்கு பழக்கம் ஏற்பட்டது. 2012ம் ஆண்டிற்கு பின்னர் 3வது எதிரிக்கு நான் தரகராக செயல்படவில்லை என்றால் சரிதான். நான் 2 முதல்4 எதிரிகளிடமிருந்து கடன் தொகை எதுவும் பெற்றுள்ளேனா என்றால் ஒருபோதும் அவர்களிடமிருந்து எந்த கடன் தொகையும் பெற்றதில்லை. 2012ம் ஆண்டிற்கு பிறகு வழக்கு தொகையினை தவிர அவர்களுடன் வேறு எந்த வரவு செலவு எதுவும் இதுநாள் வரையில் எனக்கு கிடையாது என்றால் சரிதான். எதிரிகள் 2 முதல் 4வரையில் உள்ளவர்களின் குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் 3வது எதிரியின் குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு தெரியும், 2,4 எதிரியின் குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. 3வது எதிரிக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளார் என்பது எனக்கு தெரியும். 2 மற்றும் 4வது எதிரிகள் முகத்தினை எனக்கு நன்கு பார்த்தால் அடையாளம் கண்டுகொள்வேன்

என்றால் சரிதான். 3 வது எதிரி தான் என்னிடம் நேரடியாக அணுகி ரூ.16 லட்சத்தினை கடனாக கேட்டார். தொழில் ரீதியாக செய்யும் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் மற்றும் முன்பணம் கொடுப்பதற்கும், எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் ஏற்படுத்தி கொள்வேன் என்றாலும் சரிதான்.

என்னை பொறுத்தவரையில் ரூ.16 லட்சம் என்பது பெரிய தொகையா என்றால் சரியல்ல. எனக்கு ரூ.16 லட்சம் என்பது எனக்கு பெரிய தொகை கிடையாது. ரூ.16 லட்சம் ரூபாயினை 3 வது எதிரி எங்கு வைத்து என்னிடம் கேட்டார் என்றால் திருநெல்வேலியில் வைத்து என்னிடம் அந்த தொகையினை கேட்டார். 3 வது எதிரி என்னிடம் கைபேசியில் தொடர்பு கொண்டு திருநெல்வேலிக்கு வரச்சொல்லி கேட்டுக்கொண்டார். என்னிடம் ரூ.16 லட்சம் கேட்டுக்கொண்டதற்கு பிறகு எத்தனை நாட்கள் கழித்து அந்த தொகையினை கொடுத்தேன் என்றால் சுமார் 2, 3 நாட்கள் கழித்து கொடுத்தேன். அந்த தொகையினை நான் திருநெல்வேலிக்கு எடுத்துசென்று கொடுத்தேன். நான் மட்டும் தான் பணத்தினை எடுத்து சென்று கொடுத்தேன். என்னுடன் யாரும் உடன் வரவில்லை. ரூ.16 லட்சம் தொகையினை நான் வங்கியிலிருந்து எடுத்துக் கொடுக்கவில்லை. என் கைவசம் தொழில் தொடர்பாக வைத்திருந்த பணமாகும். எதிரியிடம் நான் ரூ.16 லட்சம் தொகை கொடுத்ததற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் அல்லது குறிப்போ எதுவோ ஏற்படுத்தப்பட்டதா என்றால் அதற்கு எதிரிகளின் கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாண்மை உண்மை பத்திரத்தினை என்னிடம் அவர்கள் பெற்ற கடனுக்கு ஆதரவாக கொடுத்தார்கள். ரூ.16 லட்சம் தொகையினை எதிரிகளுக்கு கடனாக கொடுத்ததற்கு நான் என்னுடைய நாட்குறிப்பில் நான் தொகை கொடுத்த தேதி, மாதம், வருடம்

ஆகியவற்றினை குறிப்பிட்டு எழுதியுள்ளேன். எதிரிகளிடமிருந்து வழக்கு காசோலையினை திருநெல்வேலியில் அவர்களிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன். வழக்கு காசோலையில் 3 வது எதிரி கையொப்பம் செய்து என்னிடம் வழங்கினார்.

3 வது எதிரி வழக்கு காசோலையில் தொகை, பெயர், மற்றும் அவரது கையொப்பம் செய்து கொடுத்தார். முதலில் 3 வது எதிரி என்னிடம் 23 ம் தேதியில் போட்டுக்கொள்ளுமாறு கூறினார். அதன் பிறகு அவர்கள் கூறியபடி நான் தேதியை மட்டும் 23 ம் தேதி என நிரப்பி கொண்டேன். 23.12.2020 ம் தேதியை தவிர ரூ.16 லட்சம் என்று காசோலையில் எழுதியது 3 வது எதிரி தான் என்றால் சரிதான். வழக்கு காசோலை திருப்பப்பட்டதற்கு பின்னர் அதுகுறித்த வழக்கறிஞர் அறிவிப்பினை திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் உள்ள ஒரு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் எனக்கு நன்கு அறிமுகமானவர் என்றால் சரிதான். நான் தொழில் ரீதியாக பல்லடத்திற்கு செல்லும்போது நான் வழக்கறிஞரை அவருடைய அலுவலகத்தில் வைத்து சந்தித்தேன். நான் எம்.பி.ஏ பட்டப்படிப்பு படித்துள்ளேன். என்னுடைய வழக்கறிஞரிடம் நான் எதிரிகள் என்னிடம் கடன் வாங்கியது, காசோலை கொடுத்தது, மேலும் அந்த சங்கதிகளின் தேதி, மாதம், வருடம் ஆகியவற்றினை என்னுடைய வழக்கறிஞரிடம் எடுத்துரைத்தேனா என்றால் சரிதான். என்னுடைய அறிவுறுத்தலின் அடிப்படையில் தான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு தயார் செய்தார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு தயார் செய்யப்பட்டதற்கு பின்னர் நான் அதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் என்னுடைய வழக்கறிஞரிடம் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் இடம் பெற்றிருந்தது என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில்

1வது பத்தியில் 09.06.2014ல் எதிரிகள் அனைவரும் சேர்ந்து ரூ.16லட்சத்தினை என்னிடமிருந்து கடன் வாங்கியதாகவும், அந்த வகைக்காக வழக்கு காசோலையினை என்னிடம் கொடுத்ததாகவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீண்ட காலமாக எதிரிகள் என்னிடமிருந்து பெற்ற கடன் தொகையினை திருப்பி தராத காரணத்தினால் அந்த கடன் தொகைக்கு வட்டி எதுவும் கேட்டேனா என்றால் இல்லை. எதிரிகள் சுமார் 6வருட காலமாக பணத்தினை திருப்பி தராமல் இருந்த பொழுது அதற்கான வட்டி தொகையினை நான் அவர்களிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து நீண்ட காலமாக கடன் தொகையினை திருப்பி தராத காரணத்தினால் பலமுறை அவர்களிடம் பணத்தினை திருப்பி கேட்ட பொழுது கடன் தொகைக்கு ஆதரவாக கடனுறுதிசீட்டோ அல்லது ஏதாவது சொத்தினை அடமானமாக கொடுப்பதற்கு கேட்டேனா என்றால் காசோலை கொடுக்கும் வரை நான் அவ்வாறு கேட்கவில்லை. எதிரிகள் எனக்கு நீண்டகாலமாக பணத்தினை திருப்பி தராத காரணத்தினால் சில லட்சத் தொகைக்கு வட்டி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு 2014ம் ஆண்டு கொடுத்திருந்த கடன் தொகையினை நான் வேறு ஏதாவது தொழிலில் முதலீடு செய்திருந்தால் அல்லது வங்கியில் வைப்பீடு தொகையாக வைத்திருந்தால் எனக்கு சில லட்சம் கிடைத்திருக்கும் என்றால் சரிதான். எனவே அதிகப்படியான தொகைக்கு காசோலை வழக்குமாறு எதிரிகளிடம் கேட்டேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்கறிஞரிடம் பல்லடம் சென்று என்ன சங்கதிகளை எடுத்துக்கூறினேனோ அதன் அடிப்படையில் தான் புகார் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தாய்மாமனார் சரவணன் என்பவர்

திருநெல்வேலியில் வசித்து வருகிறார் என்றாலும், அவரின் மனைவியின் பெயர் ராஜேஸ்வரி என்றாலும் சரிதான். அவரின் மனைவி ராஜேஸ்வரி 2 முதல்4 வது எதிரிகள் நடத்தி வரும் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

2015 ம் ஆண்டிற்கு முன்னர் என்னுடைய திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் ராஜேஸ்வரி அந்நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதை பற்றி நான் தெரிந்துகொண்டேன். அவர் 2017 ம் ஆண்டு வரை அந்நிறுவனத்தில் வேலைபார்த்துவந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 வது எதிரி நிறுவனமானது இதர எதிரிகளால் 2017 ம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2017 ம் ஆண்டிற்கு பிறகு எதிரிகள் நடத்தி வந்த 1 வது எதிரி நிறுவனத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் அவ்வப்போது நிறுவனம் திறந்திருக்கும், அவ்வப்போது மூடி இருக்கும், நான் கடைசியாக சென்ற போது நிறுவனத்தின் உள்கட்டமைப்பு மாற்றி அமைக்கும் வேலை நடந்து வந்தது. அவ்வாறு உள்கட்டமைப்பு மாற்றி அமைக்கும் பணி யார் செய்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 3 வது எதிரியின் தம்பி செய்து வந்தார். 1 வது எதிரி நிறுவனமானது 2017 ம் ஆண்டில் கலைக்கப்பட்டு அந்த விவரம் குறித்தும், அந்நிறுவனத்தின் கணக்குகள் முடிக்கப்பட்டதும் குறித்தும், அது சம்பந்தமாக திருநெல்வேலி வணிக வரித்துறை அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது குறித்தும், இறுதியாக வணிக வரி, மதிப்பு கூட்டு வரி தாக்கல் செய்யப்பட்டது குறித்தும், எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்நிறுவனத்தில் என்னுடைய அத்தை ராஜேஸ்வரி அதில் பணிபுரிந்து வந்ததற்கான சம்பள பாக்கி கொடுக்கவில்லை என்பது தொடர்பாக தாவா இருந்து வந்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால்

எனக்கு தெரியாது. 3வது எதிரி தான் வழக்கு காசோலையில் கையெழுத்து செய்து கொடுத்தார் என்ற விவரத்தினை என்னுடைய முதல்விசாரணையிலும், என்னுடைய புகார் மனுவிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரிதான்.

2வது எதிரி வழக்கு காசோலையில் கையொப்பம் செய்துள்ளார் என்று கூறினால் சரியல்ல. 2வது எதிரி வழக்கு காசோலையில் கையொப்பம் செய்துள்ளார் என்று என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரிகளுக்கு கடன் கொடுத்ததாக கூறும் தேதி, வருடத்தில் மாற்றம் இருந்தால் அந்த அறிவிப்பானது பிழையானது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவில் 2வது எதிரி வழக்கு காசோலையில் கையொப்பம் செய்துள்ளார் என்று கூறி இருந்தால் அது தவறானது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காசோலை எண்ணை தான் என்னுடைய புகார் மனுவிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரி நிறுவனமானது வியாபாரம் முடிக்கப்பட்டு அந்த நிறுவனமானது மூடப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு அனுப்பிய அறிவிப்பானது No Such addressee என்று குறிப்பிடப்பட்டு அந்த அறிவிப்பானது திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய தாய்மாமனார் சரவணன் மனைவி ராஜேஸ்வரி 1வது எதிரிநிறுவனத்தில் பணிபுரிந்த போது அவருக்கும் அந்நிறுவனத்திற்கும் ஏற்பட்ட சம்பள பாக்கி தொடர்பான பிரச்சனை காரணமாக, வியாபார பரிவர்த்தனைக்காக கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட, இதர விவரங்கள் நிரப்பப்படாத காசோலையினை எடுத்து சென்று நிறுவனத்தினை பழி தீர்ப்பதற்காக என் வசம் அந்த காசோலையினை கொடுத்து, என்னுடைய பெயர், தேதி ஆகியவற்றை நிரப்பி என்மூலமாக பொய்யாக இவ்வழக்கானது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.16 லட்சம் சேமிப்பு தொகையாக என் வசம் கையிருப்பு தொகையாக வைத்துக்கொள்ளும் அளவிற்கு எனக்கு வருமானமோ வசதியோ கிடையாது என்றால் சரியல்ல. ரூ.16 லட்சம் கொடுத்ததற்கு வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2019 ம் ஆண்டு வரை நான் வருமானவரி தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி நான் பெற்ற வருமானம், கடன் கொடுத்த தொகை ஆகிய விவரங்கள் குறித்த விவரம் துலங்குமா என்றால் துலங்கும்., நீதிமன்றம் அதனை தாக்கல் செய்வதற்கு ஆணையிட்டால் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேன் என்று கூறுவதும், அதில் கடன் கொடுத்த விவரம், வருமானம் துலங்கும் என்று கூறுவதும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள கால கட்டத்தில் ரூ.16 லட்சம் கொடுத்ததாக கூறுவது பொய்யானது என்றாலும், அவ்வாறு எதிரிகளுக்கு கடனாக கொடுத்ததாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், அந்த கடன் தொகையானது கொடுத்ததாக கூறுவது பொய்யாக இருந்தாலும் கூட அந்த கடன் தொகையானது சட்டப்படியான கடன் பாக்கி தொகை கிடையாது என்றாலும், சரியல்ல.

<u>1,3 வது மற்றும் 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை–</u>

**(வழக்கறிஞர் 2 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை அவரது தரப்பு குறுக்குவிசாரணையாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அதனை தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டுக்கொண்டார்.)**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆவணத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் பதிவு

செய்யவில்லை சிறிதளவு தொழில் செய்து வரும் காரணத்தினால் அவ்வாறு நான் பதிவு செய்யவில்லை. ஒரு வருடத்தில் ரூ.20 லட்சத்திற்கு மேலாக பண பரிவர்த்தனை செய்யப்படும் பட்சத்தில் அதற்கான கமிஷன் தொகைக்கு ஜி.எஸ்.டி வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தவில்லை. அவ்வாறு ஜி.எஸ்.டி வரி செலுத்தி வராத காரணத்தினால் அரசாங்கத்திற்கு பெரிய அளவில் இழப்பீடு ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளேனா என்றால் சரியல்ல. கூட்டாண்மை ஒப்பந்தம் நான் எதிரிகளுக்கு பணம் கொடுத்த போது என்வசம் கொடுத்துள்ளதாக கூறியுள்ள விவரத்தினை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகார் மனுவிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கூட்டாண்மை ஒப்பந்த ஆவணத்தினை திருடிய குற்றத்திற்காக என்னுடைய தாய்மாமனார் மற்றும் கூட்டு சேர்ந்து சதி செய்த அவரின் மனைவி ராஜேஸ்வரி அதனை திருடியதற்காக அதிலிருந்து தப்பித்து கொள்வதற்காக என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, முதல் விசாரணையில் அவ்வாறு கூட்டாண்மை ஒப்பந்த பத்திரம் கொடுக்கப்பட்டது குறித்து வேண்டுமென்றே குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரூ.16 லட்சம் கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானமோ, வசதியோ கிடையாது இல்லை என்றாலும், எதிரிகளுடன் எனக்கு நெருக்கமான உறவோ, நட்போ, எந்த ரசீதும் கொடுக்காமல் அவர்களுக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு அவர்களுடன் எனக்கு உறவு கிடையாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.A. Mohammed Sadiq Hussain.,

Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti